# ஆனையிறவு போர் புலிகள் மரபுவழி சமர் புரிந்த முதற்பெரும்களம்

(யாழ்ப்பாணம்) இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள் உண்டு என முதல்தடவையாக உலகத்தைப் பேசவைத்த களம் தமிழீழத்தின் தொண்டைக்குழியில் சிக்கிக் கொண்டுள்ள பெரும் முள்ளைப் பிடுங்கி எறிய புலிகள் இயக்கம் பெரும் முயற்சி எடுத்தகளம். புலிகள் இயக்கம் மரபு வழிச்சமர் புரிந்த முதற்பெரும் களம் ஆனையிறவுச் சமர்''

(2-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 15 இதழ் 164
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 31 — 07 — 1993

## 2-ம் ஆண்டு நினைவு நாள் நினைவாலய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்) ஆனையிறவு ஆ. க. வெ சமரில் வீரச்சாவடைந்த வேங்கைகளின் இரண்டாம் ஆண்டு நினைவுநாளும் நினைவாலய திறப்பு விழாவும் இன்று மாலை 5-00 மணியளவில் கொடிகாமத்தில் அமைந்துள்ள நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

நினைவுக் கூட்டம் இரவு 7-30 மணிக்கு ஆரம்பமாகும். இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் உரையாற்றுவதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

ஈகைச்சுடர் ஏற்றல், தேசியக்கொடியேற்றல், நினைவுக்கல் திறந்து வைத்தல், நினை

4-ம் பக்கம் பார்க்க

## ● சுப்பசொனிக், புக்காரா விமானங்கள்

# வட்டு, சங்கானைப் பகுதிகளில்

# பயங்கர குண்டுத்தாக்குதல்

## இளைஞர் பலி; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிகளில் நேற்று மாலை சுப்பசொனிக். புக்காரா விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் பலியானார். பலர் படுகாயம் அடைந்தனர். பதினைந்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்தன.

நேற்றுமாலை வட்டுக்கோட்டை பகுதியில் 4-55 மணியளவில் சுப்ப சொனிக் விமானம் ஒரே தடவையில் இரு குண்டுகளை வீசியது. இக்குண்டு வீச்சினால் முதுகில் காயமடைந்து தூக்கி வீசப்பட்டு பலத்த உட்காயங்களினால் இளைஞர் ஒருவர் பலியானார். தம்பகானந்தன் முகுந்தன் (21 வயது) மாவடி வட்டுக்கோட்டை என்பவரே பலியானவராவார்.

இக்குண்டு வீச்சு சம்பவங்களில் திருமதி எம். லலிதாம்பாள் 50 வயது, வட்டு.கிழக்கு), இவரது மகள் எம் தேவமனோகரி (19வயது), கிருஷ்ணபிள்ளை சுமித்திரா (16 வயது வட்டு மேற்கு கொட்டைக்காடு), வி. மலர்மேனி (31 வயது) கிளாக்ரேட் சங்கானை, பி. திரேசம்மா (55 வயது மாதகல் முகாம் மானிப்பாய்), எஸ் சிவாம்பிகை (47 வயது வட்டு. கிழக்கு) மேலும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குடும்பஸ்தர்

(4-ம் பக்கம் பார்க்க)

### "மழைமாரி போல குண்டு சிதறல்கள் பொழிந்தன

(யாழ்ப்பாணம்) புக்காரா விமானங்களின் பேரிரைச்சலைத் தொடர்ந்து நானும் மகனும் நிலத்தில் குப்புறப் படுத்த பின்னர் எழுந்து பார்த்தபோது வெள்ளைத் துண்டுபோல வந்த குண்டுச் சிதறல்கள் மழைமாரிபோல பொழிந்தன'' இவ்வாறு சங்கானையில் நேற்றிடம்பெற்ற புக்காரா தாக்குதலினால் காய

(4-ம் பக்கம் பார்க்க)

## இளாலி சம்பவத்தில் 40 பேரைக் காணவில்லை?

(கொழும்பு) இளாலிக்கடலில் பிரயாணிகள் படகுகள் மீது நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் 40க்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது

(4-ம் பக்கம் பார்க்க)

## ஐ. ஸி. ஆர்.ஸி. நடவடிக்கை; பௌத்த பிக்குகள் கண்டனம்

(கொழும்பு?) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை இலங்கையிலிருந்து வெளியேற்றவேண்டும் என்று பௌத்த குருமார், சிங்களப் புத்திஜீவிகள் கலந்துகொண்ட கூட்டமொன்றில் வலியுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில்

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு விடுதிகளில் முப்பது தமிழர்கள் கைது

(கொழும்பு) கொழும்பில் தனியார் விடுதிகளில் தங்கியிருந்த முப்பது தமிழர்கள் ஸ்ரீலங்கா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஜலன்டீ விடுதி, கொள்ளுப்பிட்டி [illegible] அபிசெனிபோ விடுதிகளில் கடந்த23-ம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி வந்த இளைஞர் வவுனியாவில் தடுத்துவைப்பு

(வவுனியா) வடபகுதி இளைஞர் ஒருவர் தாண்டிக்குளத்தில் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் வடபகுதி நோக்கி வந்த இவர் தாண்டிக்குளம் சோதனைச் சாவடி

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரபாவை ஒப்படைக்குமாறு இந். இப்போது கோரவில்லை

\- அமைச்சர் குர்ஷித்

(புதுடில்லி) இலங்கை அரசு தனது உள்நாட்டுப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதில் தற்போது ஈடுபட்டு வருகின்றது இந்த நேரத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு வே பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்றகோரிக்கையை இந்தியா முன்வைக்க விரும்பவில்லை''

இவ்வாறு இந்திய வெளியுறவுத் துணை அமைச்சர் திரு. சல்மான் குர்ஷித் புதுடில்லியில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்குத் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனை தம்மிடம் ஒப்படைக்கும்படி இந்தியா,

(4-ம் பக்கம் பார்க்க)

## வீடுபார்க்க சென்றவரை இராணுவம் சுட்டு கொலை

(யாழ்ப்பாணம்) தெல்லிப்பழை - காங்கேசன் துறை வீதியில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்ரீலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(2-ம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் தஞ்சமடைந்த ஏழு சிங்களவர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்) மணலாறில் மண்கிண்டி இராணுவமுகாம் தகர்ப்பின் போது விடுதலைப் புலிகளிடம் தஞ்சமடைந்த ஏழு அப்பாவி சிங்கள மக்கள் நேற்று முன்தினம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டனர்.

இம்முகாம் தகர்ப்பின்போது இடம்பெற்ற பாரிய தாக்குதலில் அகப்பட்டு சிக்கித்தவித்த ஏழு சிங்கள மக்கள் புலிக

(4-ம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை சங்கத்திடம் ராணுவ அஸ்தி ஒப்படைப்பு

(வவுனியா) மணலாறு மண்கிண்டி இராணுவமுகாம் தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட 18 இராணுவ சடலங்களின் எரித்த அஸ்தியை புலிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்

(4ம் பக்கம் பார்க்க)

## கட்சி நீக்கத்தை ஆட்சேபித்து அனுரா அத்தனகலையில் இன்று சத்தியாக்கிரகம்

(கொழும்பு) சுதந்திரக் கட்சியிலிருந்து திரு. அனுரா பண்டாரநாயக்காவை இடைநிறுத்தி வைத்துள்ள உத்தரவை உடன் நீக்குமாறு கோரி திரு. அனுரா பண்டாரநாயக்கா தனது ஆதரவாளர்களுடன் இன்று அத்தனகலையில் சத்தியாக்கி

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## புத்தகங்கள் விற்பனை

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு இந்திய நாவல்கள், டிக்சனெறிகள், ஆங்கிலதமிழ் களஞ்சியம் (மதுரஸ் டிக்செனெறி) ஸ்ரீகாந்தா புத்தகசாலை, நல்லூர். (ஏ-3277)

## சமய அறிவுப் போட்டி

பாலாஜியின் ஆதரவில் சரசாலை இந்து மன்றம் நடாத்தும் சமய அறிவு, பேச்சுப் போட்டிகள் 01-8-93 ஞாயிற்றுக்கிழமை நேரம் காலை 9 மணிக்கு (ஏ-3290)

## வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsule கிடைக்குமிடம் எஸ். கே. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (இ-111)

## தேவை

அனுபவமுள்ள கொம்பசிட்டர், பைண்டர் தேவை. அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும். ஏ. எஸ். ஜே. பிரின்டிங் வேக்ஸ், மல்லாகம். (இ-365)

பொலிகண்டி கந்தவன ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு வேலி போட 500-1000 மட்டைகளை அவசியமாக தேவை வைத்திருப்பவர்கள் கீழ்காணும் விலாசத்திற்குத் தங்கள் விலை விபரங்களை விண்ணப்பிக்கவும். ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை. (ஏ-3284)

¼ அமிகுல இருப்புக்கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். துண்டுக்கம்பிகளாயின் 2½ அடிக்கு மேல் இருத்தல் வேண்டும். தொடர்புகட்கு: சக்திப்பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன் துறை வீதி, தாவடிச்சந்தி, தாவடி. (ஏ-3294)

## வகுப்பு பரீட்சை
(ஆண்டு 4)

ஆண்டு 4ற்கு புலமைப்பரிசில் (1994) பரீட்சைக்கு அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படவுள்ளது. வகுப்பு ஆரம்பம் 31-07-93 சனி மு. ப. 8-30. பரீட்சை மாதம் இரண்டு நடைபெறும். அடுத்தபரீட்சை 07-08-93 சனி மு. ப. 8-00, மு. ப. 11-00 பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-364)

## கல்வி

G. C. E. (O/L) கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆ. நமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சோமசுந்திராவீதி, சுண்டுக்குளி. (இ-368)

— பெயர் மாற்றம் —
யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(இ 330)

## இலவச அக்குபஞ்சர் சிகிச்சை

1-8-93 ஞாயிற்றுக்கிழமை முதல் 35, ஐந்து சந்தி நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வட இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தினால் இலவசமாக தினசேவை நடைபெறும். Dr. T. புவிராசன், தலைவர். (சி-366)

## கிரிக்கெட் இலங்கை-254

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கொழும்பில் நடைபெறும் 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3-வது நாளான நேற்று முன்தினம் ஆட்ட முடிவில் இந்தியா தனது 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 205 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இலங்கை முதல் இன்னிங்ஸில் மொத்தம் 254 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் மொத்தம் 366 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்று ஓய்வு நாளாகும். (வி-வ)

## நடிகமணி நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உசாத்தான சபா நடத்தும் நடிகமணி வி. வி. வைரமுத்து நான்காவது நினைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பல சிறப்புரைகளும், கலைஞர்கள் கௌரவிப்பும், இதனைத் தொடர்ந்து காரை செ சுந்தரம்பிள்ளையின் தயாரிப்பில் உருவான "மாவை கண்டம்" நாடகமும் நடைபெறும். (இ-மி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் மாதாந்த இலக்கியச் சொல்லாடல் நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ் இலக்கிய வட்டத்தின் இணைச்செயலாளர் செம்பியன் செல்வனது யாழ். அத்தியடி, 10-ம் இலக்க இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு மாவட்டப் பிரதி ஆணையாளரும் யாழ் இலக்கிய வட்டத் தலைவருமான திரு. து. வைத்திலிங்கம் தலைமை தாங்குவார். (எஸ்)

## இராசிபலன்

31-07-1993
சனிக்கிழமை
(தமிழுக்கு ஆடி 17)

திரயோதசி பி. ப. ப. 5-17 வரை. பூராடம் பி. இ. 5-19 வரை. சித்தயோகம். இராகுகாலம் காலை 9-03 முதல் 10-33 வரை. சுபநேரம் மாலை 3-03 முதல் 4-33 வரை.

மேஷம்: பேச்சில் கடுமை, தொழில் பாதிப்பு, அலைச்சல்.
இடபம்: புத்தி தடுமாற்றம், கடமை தவறுதல், வெறுப்பு.
மிதுனம்: தருமப்பணி, புதிய சிந்தனை, மனக்களிப்பு.
கடகம்: சுபகாரியம், திடீர் பணவரவு, பயண நன்மை.
சிம்மம்: காரிய அனுகூலம், இனம்புரியாத கவலை, பணமுடை.
கன்னி: குடும்ப கஷ்டம், அதிக செலவு, தொழில்பகை.
துலாம்: கொள்கைவளர்ச்சு வரவேற்பு, புதிய ஸ்தானம், உறவினர் வருகை.
விருச்சிகம்: பொதுப்பணி, வாக்குவன்மை, காரியசித்தி.
தனுசு: இடமாற்றம், அறிஞர் ஆசி, செயல்வேகம்.
மகரம்: பேச்சில் நிதானம், வீண் செலவு, மன சங்கடம்.
கும்பம்: கூட்டு முயற்சி, தொழில் சிறப்பு, வெளியூர் தொடர்பு.
மீனம்: வாக்குக்கு மதிப்பு, தந்தையர் உதவி, உடல் நலம்.

ஜோஸ்யர்

# நெஞ்சம் நீங்காத

## 2ம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில்:
23-04-1913

ஆண்டவன் அடியில்:
31-07-1991

திதி:
7-08-1993

அமரர்
V. M. கணபதிப்பிள்ளை அவர்கள்
(V.M.K. நகைமாளிகை உரிமையாளர், சாவகச்சேரி)

தன்மானம் படைத்தவரே!
தர்மோராய் நாம் விளங்க
எங்களை அன்பாய் ஏற்றே
ஏற்றி வைத்த பேரொளியே!
ஆண்டு இரண்டு ஓடி
அன்று மறைந்தாலும்
வேண்டிப் பணிகின்றோம்
நின் நினைவு அகலா நெஞ்சோடு

—ஊழியர்
V. M. K. நகை மாளிகை,
சாவகச்சேரி.

(இ-362)

தேடுவாரற்றுக்கிடந்த

# டப்பியை திறந்த இளைஞர் பலி

(மன்னார்)

மன்னாரில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள விடத்தல்தீவு தங்கன்குளம் பகுதியில் தேடுவாரற்றுக் காணப்பட்ட டப்பி ஒன்றை எடுத்து பரிசோதித்த இளைஞர் ஒருவர் டப்பி வெடித்ததால் பரிதாபகரமாக உயிரிழந்தார். மேலும் இரு சிறுவர்களை காயமடைந்தனர்.

புலேந்திரன் (16 வயது) என்பவரே பலியானவராவர். காயமடைந்த ஏனைய இருவரும் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஈ-இ)

## வீடுபார்க்க
(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியிலுள்ள தனது வீட்டைப் பார்க்கச்சென்ற ஒருவரே இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் கொல்லப்பட்டவர் விபரம் எதுவும் அறியப்படவில்லை என்றும் புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. (ரி)

## விளையாட்டுபோட்டி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இராமநாதன் பாலர் பாடசாலைச் சிறுவர்களின் விளையாட்டுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை 1ம் திகதி காலை ஒன்பது மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரமும், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

## கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

அந்தோனி யேசுதாசன் என்பவருடைய பிறப்புச் சான்றிதழ் இ. மகிரால் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சிகாட்டி பெற்றுக் கொள்ளவும்.

0 0 0

திறப்பு கோர்வை ஒன்று ஏ. மதனகுமார் என்பவரால் இராசாவின் தோட்டச்சந்தியில் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளவும்.

நுண்ணாய்வு

## பரிசோதகர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் அலுவலக நுண்ணாய்வுப் பரிசோதகர்கள் தெரிவுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் திணைக்கள மட்டத்திலுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் தகுதியுடைய பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களை உடனடியாக பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்திற்கு (வடமாகாணம்) அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர். விண்ணப்பங்கள் 1987ம் ஆண்டு அஞ்சல் அலுவலக சுற்றறிக்கை 17 (24-4-87) இல் கொடுக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்படுதல் வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது. -ரி

## சோதிட ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிட ஒன்றியத்தின் வாராந்த சோதிட ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறும். அன்றைய ஆய்வரங்கில் "பாவகாதிபதி" என்ற தலைப்பின் ஆய்வு இடம்பெறும். ஆய்வரங்கை தபால் அதிபர் முத்துக்குமாரு இரத்தினம் பிள்ளை நெறிப்படுத்துவார். (எஸ்)

## ஆனையிறவு
(1ம்பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஆ. க. வெ. இராணுவநடவடிக்கை இரண்டாவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இரத்தத்தில் தோய்ந்த புதிய புரட்சிகர வரலாறு எமது மண்ணில் எழுதப்படுகின்றது எமது நிலத்தின், எமது இனத்தின் விடுதலைக்காக தாம் கொடுக்கின்ற விலை மிகப்பெரியது. ஒப்பற்றது, தியாகங்களால் அர்ப்பணிப்புகளால் உரமாக்கப்பட்டு ஆட்டம் காணமுடியாத உறுதியுடன் எமது போராட்டம் கட்டி வளர்க்கப்படுகின்றது

தமிழீழ தேசியத்தின் ஆயிரக்கணக்கான புதல்வர்கள் எங்கள் தேசத்தின் நிர்மாணிப்புக்காகத் தம்மையே அடிக்கற்களாக்கிப் புதைந்து கிடக்கின்றனர்.

வாழ்க்கையை மக்களுக்காகவே அர்ப்பணித்து, மக்களுக்காகவே சாவையும் அணைத்துக் கொள்வதில் அவர்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். பெருமைப்பட்டனர். ஆகவே இராணுவ நடவடிக்கையில் ஆனையிறவும் பெருங்களத்தில் நடந்து முடிந்த வரலாற்றுச் சமர். உலகம் மூக்கில் விரலை வைத்து தமிழீழத்தை வியந்து பார்க்க வைத்த களம். சிங்கள தேசத்தின் முப்படைகளினதும் திரண்ட பலத்தின் ஒருமித்த தாக்குதலை எதிர்கொண்டு நின்று புலிகள் இலக்கம் மரபுவழிச் சமர் புரிந்த முதற்பெரும் களம்.

ஈராண்டுகளுக்கு முன்பு இதே நாட்களில் அந்த யுத்தம் நடந்து கொண்டிருந்தது. அத்தகைய வரலாற்றுச் சமரின் போது 599 புலிவீரர்களும், புலிகளுக்கு தோள்கொடுத்து நின்ற 3 துணைப்படை வீரர்களும் தாயக விடுதலைக்காக தமது உயிர்களை ஈந்தார்கள்.

அந்த உலர் நிலத்தில் அந்த கடற்கரை மண்ணில் பரப்பில், வெட்ட வெளிகளில் இடக்கின்ற பற்றைகளுள் நெருப்பனைகளுக்கடியில் தங்கள் உடல்களை சரித்த அந்த விடுதலை வீரர்களின் இரண்டாவது நினைவுநாள் இன்றாகும்.

அந்த உன்னதமானவர்களின் ஞாபகார்த்தமாக கொடிகாமம் கண்டி வீதியில் உருவாக்கப்பட்ட நினைவாலயம் இன்று மாலை 5-00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதுடன் அந்த மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

எங்கள் அன்புக்கினிய மக்களே! எங்கள் குழந்தைகளாக எங்கள் உடன் பிறப்புக்களாக எங்களின் இனிய நண்பர்களாக வாழ்ந்து எங்களின் விடுதலைக்கென்றே சாவையும் ஏற்ற அந்தவீரமறவர்களுக்கு வீர வணக்கம் செலுத்த அவர்களின் நினைவாலயத்தின் முன்னால் ஒன்று திரளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (ரி)

இடம் பெயர்ந்தவர்களுக்கு

# ஜூலை மாத நிவாரணமும் பழைய உணவு முத்திரையில்

யாழ்ப்பாணம், ஜூலை 31 இடம்பெயர்ந்தோருக்கான ஜூலை மாத நிவாரண விநியோகத்தை ஜூன் மாதத்துக்கு வழங்கப்பட்ட முறைப்படி பழைய உணவுமுத்திரையில் வழங்குமாறு யாழ். அரச அதிபர். திரு. கா. மாணிக்கவாசகர் ப. நோ. கூ. சங்கங்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

புதிய உணவு முத்திரைகள் வந்து சேராததையடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதத்துக்கான நிவாரணத்துக்கு நாட்டு அரிசி, மா, சீனி, பருப்பு, தேயிலை, சவர்க்காரம் ஆகியன வழங்கப்படவிருக்கின்றன.

பால்மா வழங்கப்படமாட்டாது. (த-3)


## MATHS CENTRE

ஆண்டு- 5 புலமைப் பரிசில் வகுப்பு
(1993 Aug.)

* பல ஆசிரியர்கள் சேர்ந்து மாதிரி வினாத் தாள் முறையில் போதிக்க உள்ளனர்.

ஆரம்பம்: 31-07-1693
சனி 2-15p. m. (6391)


## ஆலயங்களில்

குடத்தனைசம்பேதுருவானர் ஆலய திருநாள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இத் திருநாள் முடிவில் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகள் திருப்பலிப் பூசையை ஒப்புக் கொடுப்பார். (க-173)

o o o

கோப்பாய் வடக்கு பலானை அம்மன் கோயில் வருடாந்த இரத உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். (க-72)

o o o

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் கோயில் வேல் பவனி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (க-117)

## மலர் வெளியீடு

யாழ். மாநகராட்சி மன்றத்தின் "நல்லைக் குமரன்" மலர் வெளியீட்டு விழா நேற்றுக் குறிப்பிட்டதுபோன்று இன்று சனிக்கிழமை நடைபெறமாட்டாதெனவும் அடுத்த சனிக்கிழமையே (07 - 08 - 1993) நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-163)

# கீழே கிடந்து எடுத்த பொருள் வெடித்தது

## மன்னாரில் சிறுவன் பலி

மன்னார் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் கவளிப்பாற்றுக் கிடந்த பொருள் ஒன்றை எடுத்த சிறுவன் ஒருவன் அது வெடித்ததில் உயிரிழந்தான்.

மன்னாரில் உள்ள கல்விக்காடு தங்கள் குளப்பகுதியில இச்சம்பவம் நடந்தது.

கவளிப்பாரற்றுக் கிடந்த டப்பி ஒன்றை மாடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவர்கள் எடுத்து பார்த்தபோது அது வெடித்தது. இதனால் மாடு மேய்த்த சிறுவர்களுள் ஒருவரான 16 வயதுடைய புலேந்திரன் பலியானார். அவருடன் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

இந்தப் பகுதியில் சில மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-162)

# நான் பதவி நீடித்திருந்தால் யுத்தம் முடிவடைந்திருக்கும்

## இப்படிக் கூறுகிறார் ஜே. ஆர்.

கொழும்பு, ஜூலை 31 நிறைவேற்று ஜனாதிபதியாக நான் தொடர்ந்து பதவியில் இருந்திருந்தால் வடக்கு—கிழக்கு யுத்தம் இதுவரை முடிவடைந்திருக்கும்.

கொழும்பு சட்டக் கல்லூரியில் நடைபெற்ற மாதிரி நாடாளுமன்றக் கூட்டத்தில் "1978 அரசமைப்புச் சட்டம்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்துகையில், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு வரவழைத்தது சரியான முடிவாக இருக்கலாம் அல்லது பிழையான முடிவாக இருக்கலாம்.

ஆனால் யுத்தம் முடிய முன்னர் அவர்களைத் திருப்பி அனுப்பியது மிகப் பெரிய தவறு.

இப்படி ஜே. ஆர் மேலும் கூறினார். (இ-6)


## திக்கம்

மடத்து வாசல் சித்தி விநாயகர் ஆலய

### 9ஆம் நாள் அலங்கார உற்சவம்

இன்று (31-7-1993) சனிக்கிழமை மாலை 8மணி

* தெய்வீகத் தொடர் அருட்பெருரை
"வன்னிமந்தாரத்தின் பெருமை"
செல்வி குமுதினி தங்கவேல் B. A.

* பட்டிமண்டபம்
நடுவர்: இ. ஜெயராஜ்
(அமைப்பாளர், கம்பன் கழகம்)
பொருள்: 'வியத்தகு பெருந்தன்மை பெரிதும் வெளிப்படுவது வாலியிடமா? கர்ணனிடமா?'
கம்பன்கழக அங்கத்தவர்கள் பங்கு கொண்டு சிறப்பிப்பார்கள்.

* வில்லிசை
நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர்

அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

- 9ஆம் நாள் விழா உபயகாரர்கள் -

(26723)



## விடுதி மேற்பார்வையாளர் தேவை

10 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளின் விடுதி மேற்பார்வையாளராக செயற்படுவதற்கென பெண்கள் தேவை.

கல்வித்தகைமை:- க.பொ.த. சாதாரணம் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.
வயதெல்லை:- 25 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
இடம்:- திருநெல்வேலி, முத்துத்தம்பி வித்தியாலயம் அருகாமையில் உள்ள மகளிர் அலுவலகம்.
காலம்:- 04-08-1993 காலை 9மணிக்கு நேரில் வரவும்.

(26789) — நிர்வாகம்.


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### ★ பிரசோபனன் ★ குருபரஞ்சோதிநாதன்

அராலி மேற்கைச் சேர்ந்த
குருபரஞ்சோதிநாதன் - மோகனராணி

தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரசோபனன் இன்று (31 - 07 - 1993) தனது முதலாவது பிறந்த நாளை அராலியிலுள்ள தமது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா (சுவிஸ்), அம்மா, அக்கா-பிரதாயினி, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பா (கொழும்பு), சித்தப்பா (ஜேர்மனி), அன்ரிமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணா (ஜேர்மனி) மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் அம்பாள் அருள் பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

(இ-5536)


## விக்னா

கல்விநிறுவனம்

94
அலகு ரீதியான
வினா - விடை
மீட்டல்

ஆரம்பம்:
01 - 08 - 1993
9-00மணி

பொருளியல்—
திரு. கலாகரன்
1 - 00 — 2 - 30

வர்த்தகம்—
திரு. தேவா
10 - 00 — 11 - 00

கணக்கியல்—
திரு. S. K. பிரபாகரன்
2 - 00 — 4 - 00

அளவையியல்—
திரு. விக்கி
11 - 00 — 12 - 00

தமிழ்—
திரு. குழந்தை
10 - 00 — 11 - 00

இந்துநாகரிகம் - சமயம்—
திரு. காரைசுந்தரம்பிள்ளை
12 - 00 — 1 - 00

புவியியல்—
திரு. குணராசா
9 - 00 — 10 - 00

அரசியல்—
திரு. ஜெயகாந்தன்
9 - 00 — 10 - 00

வரலாறு—
திரு. சிறீதரன்
1 - 00 — 2 - 00

(இ/5526)



## A/L - 94

தூய, பிரயோக கணிதம்
ஆசிரியர்
திரு. கிருஷ்ணர்
ஆரம்பம்
01 - 08 - 1993
(சனி / ஞாயிறு பி. ப 4 — 6 மணி)

### யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(சி/5537)



## வெளியீடுகள்

எங்கள் மண்ணின் தயாரிப்பு!
சிறந்த கலைஞர்களின் பிரமிக்க வைக்கும் நடிப்பு!
பார்ப்பவர்களை
கண்ணீர் சிந்த வைக்கும் காட்சிகள்!

இத்தனையும் ஒருங்கிணைந்த
"இது எங்கள் தேசம்"
"தாயகக் கனவு"

வீடியோ படங்கள் உங்கள் வீடுகளை நோக்கி வந்துவிட்டன.

இன்றே உங்கள் வீடுகளில் பார்த்து மகிழுங்கள்.

மற்றும் குடும்பத்துடன் பார்த்து மகிழக்கூடிய வகையில் தணிக்கை செய்யப்பட்ட சிறந்த சினிமா படங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்!
"நியூவிக்ரேஸ்"
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(6389)

மணிவாக்கு

கடமை என்பது ஒவ்வொரு மொழியிலும் மகோன்னத வார்த்தை - ரபர்ட்லீ

## நமது நோக்கு

### கிளாலிக் கொடூரம்!

'சுப்பசொனிக்' குண்டுவீச்சுக் கொடூரம் தந்த அதிர்ச்சியிலிருந்து மக்கள் மீளுவதற்கு முன், கிளாலிக் கொடூரம் பற்றிய செய்திகள் வந்துள்ளன.

எத்தனைத் தடைகள் இருந்தாலும், குடாநாட்டைவிட்டுப் பொதுமக்கள் வெளியே போய் வரவேண்டியுள்ளது

உயிரைப் பணயம்வைத்தாயினும், மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு வேண்டிய அவசரத் தேவைகள் உள்ளன என்பதை அரசு புரிய மறுப்பது ஏன்?

முன்பு பல தடவைகள் கிளாலிப் படுகொலைகள் நடாத்தியும், மக்கள் பயணங்கள் தொடர்கின்றன.

போராளிகள் மீதுதான் போர் என்று கூறிக்கொண்டு பொதுமக்களைக் கொன்று குவிப்பதன் நோக்கமென்ன?

பயணிகள் படகைச் சுற்றி வளைத்த படையினர் அவர்களைக் கொல்லாது கைது செய்திருக்கலாம்.

ஆனால், தப்பிவந்த பயணிகளின் கண்ணீர்க் கதைகளைக் கேட்கும்போது கொலைகளின் கொடூரம் தெளிவாகின்றது.

"நாம் பயணிகள்! சுடாதீர்கள்!" என ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பொதுமக்கள் கத்தியிருக்கிறார்கள்.

ஓர் இனத்தின் மீது வேண்டுமென்றே கட்டவிழ்த்துவிடப்படும் கொடூரம் என்பதற்கு வேறு சான்றுகள் வேண்டுமா?

பல சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கைகளின்பின், எமது கடற்படை, இராணுவம் எல்லாம் பொறுப்புணர்ச்சியோடு கடமை புரிகின்றன என அரசு தரப்பு வெளியிடும் அறிக்கைகளின் நம்பகத் தன்மைக்கே இச்சம்பவங்கள் சவால்விட்டுள்ளன?

அரச சார்பான பத்திரிகைகள், வானொலிகள் இக்கொடூரம்பற்றிய செய்திகளை மூடி மறைத்துவிடும் அல்லது திரித்துக் கூறிவிடும்!

சுப்பசொனிக் தாக்குதல்பற்றித் தமக்குத் தெரியாது என்று இராணுவ அதிகாரி பத்திரிகையாளரிடம் தெரிவித்தாராம்!

கொடுமைகளுக்கு ஆளாகும் பொதுமக்களின் கண்ணீர் கூவிய வாவி போன்றது என்பதை நாம் நினைவிற் கொள்வோம்!

# ★ ஜேர்மனியில் 6 மாதத்தில் வெளிநாட்டு அகதிகள் மீது 3,365 தாக்குதல் சம்பவம்

(பொன்)

வெளிநாட்டு அகதிகள் மீதான தாக்குதல்கள் ஜேர்மனியில் கடந்த வருடத்திலும் பார்க்க இந்த வருடம் பெருமளவு அதிகரித்துள்ளது. கடந்த ஆறு மாதங்களில் 3,365 தாக்குதல்கள் இடம் பெற்றதாகவும், இதே காலப் பகுதியில் கடந்த வருடம் 1,443 தாக்குதல்களே இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப் பட்டது.

1993ல் இது காலவரை வெளிநாட்டவர் மீதான ஜேர்மன் தீவிரவாத இளைஞர் மேற்கொண்ட தாக்குதல்களில் 5 துருக்கியர் இறந்தும் 321 பேர் காயமடைந்துமுள்ளனர்.

வெளிநாட்டவர் மீதான வன்முறையில் 1992ம் ஆண்டு முழுவதுமே 11 ஜேர்மனியரும் 6 வெளிநாட்டவரும் இறந்தும் 596 பேர் காயமுற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

வெளிநாட்டு அகதிகளை ஜேர்மனியிலிருந்து வெளியேறக் கோரியே இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டுவருகிறது. (கே-இ)

## இலவச சிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தினரால் நாளை 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதியினால் இலவச அக்குபஞ்சர் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்படும்.

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வாய்க்கால்தரவை பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 21ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

நாளை முதலாம் திகதி தேர் உற்சவமும் 2-ம் திகதி தீர்த்தோற்சவமும் 4-ம் திகதி பூங்காவனத்துடனும் உற்சவம் நிறைவு பெறும். (உ-வி)

## இராணுவ விசாரணைக்கு நீதிமன்றம் நியமனம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மண்கிண்டி இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கியது பற்றி விசாரணை செய்வதற்காக, இராணுவ விசாரணை நீதிமன்றம் ஒன்று நேற்று முன்தினம் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணவினால் நியமிக்கப்பட்டது.

மேற்படி நீதிமன்றத்தின் தலைவராக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவும், மற்றும் பிரிகேடியர் நந்தா டி சில்வா, பிரிகேடியர் ஹெலி பீரிஸ் கேர்ணல் விஜயதுங்கா ஆகியோரும் நியமிக்கப்படுகின்றனர். (வி-இ)

## கொழும்பில் — ஜே. ஓ. ஸி. அருகே ஆயுதங்களுடன் நின்றவன்

(கொழும்பு)

கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகம் (ஜே. ஓ. ஸி.) அருகே நின்ற வாகனம் ஒன்றிலிருந்து விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் ஆயுதங்களை பொலிசார் கைப்பற்றியுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு வருடங்களுக்கு முன்பு கொழும்பு கூட்டுப்படை தலைமையகம் நோக்கி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெடிகுண்டு தாக்குதலின்போது இவ்வாகனமும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் அரசு தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-சி)

## தமிழக அரசு விரைவில் கலைக்கப்படும் சாத்தியம்

(சென்னை)

பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக அ. தி. மு. க உறுப்பினர்கள் வாக்களித்ததன்மூலம் தமிழக ஆட்சி கலைக்கப்படக் கூடிய சூழ்நிலையை தமிழக முதல்வர் ஜெயலலிதா தோற்றுவித்துவிட்டதாக தமிழக இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

ஆயினும் தமிழக அரசு உடனடியாக கலைக்கப்படும் சூழ்நிலை இல்லையென தமிழக பத்திரிகைகள் கூறியுள்ளன. (உ-இ)

## இஸ்ரேல் தொடர்ந்தும் லெபனான் மீது தாக்குதல்

(பெய்ரூட்)

இஸ்ரேல் லெபனான் மீது மேற்கொள்ளும் தாக்குதல்களை சர்வதேச சமூகம் கண்டித்த போதும் இஸ்ரேல் தொடர்ந்து தீவிரமான தாக்குதல்களை தொடுத்துள்ளது.

கனரக வாகனங்கள் பீரங்கி வண்டிகள் சகிதம் இஸ்ரேலிய படைகள் தெற்கு லெபனானினுள் ஊடுருவியதோடு அங்கிருந்து விமான ரொக்கட் தாக்குதல்களை வட லெபனான் மீதும் நடத்த ஆயத்தம் செய்துவருகிறது.

கிராமிய மக்கள் மீது தாக்குதல் தொடர்வதால் பலியாவோர் தொகையும் காயமடைவோர் தொகையும் அதிகரித்துவருவதோடு, அகதிகளாகச் சிதறிஓடுவோர்தொகையும் அதிகரித்த வண்ணம் உள்ளன. (கே-இ)

## ஜெயலலிதா விவகாரம் — பதவிநீக்கல் மனுக்களை விசாரிக்க தடை உத்தரவு

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை சட்டப் பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கச் செய்யக் கோரும் மனுக்கள்மீது தலைமை தேர்தல் ஆணையர் ரி. என். சேஷன் விசாரணை நடாத்தவோ சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கவோ கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மற்றும் நான்கு பேர் கொடுத்திருந்த மனுக்கள்மீது திரு. என். சேஷன் விசாரணை நடாத்தக்கூடாது என தடைவிதிக்கக் கோரி செல்வி ஜெயலலிதா தாக்கல் செய்திருந்த 5 ரிட் மனுக்களை நேற்று விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிபதி கனகராஜ இவ் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தார். (க-இ)

## இடதுசாரி அரசியல் கட்சி புதிதாக ஆரம்பம்

(கொழும்பு)

புதிய இடதுசாரி அரசியல் கட்சி ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

ஜனதா மிதுரு (மக்கள் நண்பன்) என்ற பெயரில் இந்தக்கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தில் இந்தக்கட்சி அரசியல் கட்சியாக விரைவில் பதிவு செய்யப்படும் எனவும் அடுத்த பத்தாண்டு காலத்தில் இந்தக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் எனவும் கட்சியின் அமைப்பாளர் சந்திரிகா ரணவக தெரிவித்துள்ளார். (இ)

## உழைப்பாளரை இழந்த பெண்களின் புனர்வாழ்வு

(யாழ்ப்பாணம்)

உழைப்பாளரை இழந்த பெண்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனங்காண்பதற்காக அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஏற்பாடு செய்திருந்த ஆய்வுப்பட்டறையின் செயற்திட்ட முன்மொழிகளுக்கமைவாக யாழ் மாவட்டத்துக்கான ஆலோசனைச்சபை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இக்குழுவினர் தமது அறிக்கையை தயாரிப்பதற்காக முதற்கட்டமாக உழைப்பாளரை இழந்த பெண்களுடைய முதற்கட்ட தகவல்களைப் பெறவும், அரசசார்பற்ற நிறுவனங்களின் கடந்தகால வேலைத்திட்டங்கள் தொடர்பான மதிப்பாய்வு ஒன்றை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். —இ

## உடுகம்பொல பதவிக்கு பலத்த கண்டனம்

(கொழும்பு)

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு ஆளான முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல, துறைமுக அதிகாரசபையின் உதவித் தலைவராக நியமிக்கப்பட்டதற்கு மனித உரிமைகள் காப்புக் குழுக்கள் தற்போது கண்டனம் தெரிவித்துள்ளன.

மேற்படி செல்வாக்கு மிக்க பதவியில் திரு. உடுகம்பொலவை நியமித்ததற்கு பல வெளிநாட்டு தொண்டர் ஸ்தாபனங்களும் அரசாங்க அதிகாரிகள் பலரும் தற்போது எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக நேற்று பி.பி.ஸி. தெரிவித்தது. (வி-இ)

## சமாதானக் கதவுகள் திறந்தே உள்ளன — அமைச்சர் ஹேரத்

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு சம்பந்தப்பட்டவர்களுடன் சமாதானப் பேச்சுக்கள் நடாத்த அரசு தனது கதவுகளை எப்பொழுதும் திறந்தே வைத்திருக்கின்றது, என வெளிவிவகார அமைச்சர் திரு. ஹரோல்ட் ஹேரத் பி. பி. ஸி க்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டு காலத்தில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் பலியான இந்தப் பிரச்னைக்கு, இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை ஒப்புக்கொண்ட அமைச்சர் தமிழர்-சிங்களவர் பிரச்னையை இலங்கை அரசே தீர்த்து வைக்கவேண்டும் என்று இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் கூறியதை தான் வரவேற்பதாகவும் பி. பி. ஸிக்கு மேலும் தெரிவித்தார். (வி-இ)

## நல்லைக் கந்தனை நாடு

இ. ஹிந்தோளம் தா; ஆதி

பல்லவி

எல்லை இல்லாதோர் இடர்வரும் போதெலாம்
நல்லைக் கந்தனை நாடிடில் தீருமே!
(நல்லை)

அநுபல்லவி

அல்லும் பகலெல்லாம் அடியாரைக் காக்கவே
முல்லைச் சிரிப்புடன் முன்னே இருப்பான்
(நல்லை)

சரணம்

பிச்சை ஏற்றேனும் வயிற்றினைக் கழுவினும்,
கச்சி அப்பனின் கவியொன்று காணுமே
அச்சம் கொண்டுநீ அலைந்திடும் போதெலாம்
அருணகிரிதரும் புகழொன்று ஆற்றுமே
(நல்லை)

— சேந்தன்.

★ [இன்று நல்லூர்க் கந்தன் 8ம் நாள் உற்சவம்]

# சின்னஞ் சிறு விளம்பரம்

### அச்சுக்கோப்பாளர் தேவை

5 வருட அனுபவமுள்ள பக்கம் கட்டுபவர், பைண்டர், அச்சுக் கோப்பாளர் (பெண்) உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ஏ. எஸ். ஜே. பிரின்டிங் வேக்ஸ், மல்லாகம். [26737]

### தேவை

½ அங்குலம் இரும்புக்கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளப் படும். துண்டுக் கம்பிகளாயின் 2½ அடிக்கு மேல் இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு: சக்திப் பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-5535)

### விற்பனைக்கு

புதிய இரும்பு அலுமாரிகள் (Steel Cup Board) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. திரேவின், இல: 38 தேவாலய வீதி, யாழ்ப்பாணம். (6380)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய விடை உடனே கிடைக்கும். தினமும் காலை 8-30 — 12-30, பி.ப. 3-00 — 6-00. த. சிவானந்தன் பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (26704)

### ஆங்கிலப் பரீட்சை

N. C. E. தேசிய ஆங்கில சான்றுப் பரீட்சைக்குரிய கடந்த கால வினாப்பத்திரங்கள் மாதிரி - வினா - விடை கட்டுரைகளுடன் அமைந்த வழிகாட்டி. மீண்டும் வெளி வந்துவிட்டது. தொகுப்பு: த. த பஞ்சாட்சரம், விலை 70-00 ரூபா. கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம் புத்தக நிலையம், Science Hall கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். [இ-5636]

### ஆண்டு - 4 வகுப்பு

1994 ஆகஸ்ட் புலமைப்பரிசில் மாணவருக்கு (ஆண்டு-4) அடிப்படையில் இருந்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இணைய விரும்புவோர் விண்ணப்பிக்கவும். அனுமதிப் பரீட்சை 31-07-93 பிற்பகல் 3 மணி. ஆரம்பம் 01-08-1993 எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26700)

ஆண்டு 4இற்கு புலமைப்பரிசில் (1994) பரீட்சைக்கு அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படவுள்ளது. ஆரம்பம்: 31-07-93 சனி முற்பகல் 8-30 மணி. மாதாந்தம் இரண்டு பரீட்சைகள். அடுத்த பரீட்சை 7-8-93 சனி முற்பகல் 8-00. முற்பகல் 11-00. பதிவு செய்யவும் புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26727)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, லக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம் S. K. சாமி- நெல்லியடி, லலிங்கு-சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6366)

வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்படும் புலமைப் பரிசில் வினாத்தாள் 1 - 8 - 93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26712)

### மிருதங்கம்

மிருதங்க முழு வேலையும் ஒரு கிழமைக்குள் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (26689)

---

வட்டுக்கோட்டைத் தொகுதி
தெங்கு வனம் பொருள் உற்பத்தி
விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்
சங்கானை

## பதவி வெற்றிடங்கள்

1. பதவி: இலிகிதர்

**தகைமைகள்:**

க. வே. ஆணைக்குழுவின் 14ஆவது சம்பளத் திட்டத்தில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது க. பொ. த (சாதாரணம்) கணிதம், தமிழ் உட்பட 5 திறமைச் சித்திகள்.

**சம்பள அளவுத் திட்டம்:**

302/13க்கு அமைவான புதிய சம்பளத் திட்டம்.

2. பதவி: கிளை முகாமையாளர் தரம்-III

**தகைமைகள்:**

க. வே. ஆணைக்குழுவில் 14ஆவது சம்பளத்திட்டத்தில் 2வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது க. பொ. த (சாதாரணம்) கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி;

**சம்பள அளவுத் திட்டம்:**

302/13க்கு அமைவான புதிய சம்பளத்திட்டம்.

**குறிப்பு:**

மேற்படி சங்கத்தில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் 15-8-1993 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், வட்டு. தொகுதி தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
வட்டு. தொகுதி தெ. ப. பொ. உ. வி. கூ.
சங்கம்,
சங்கானை.

(26728)

---

### O/L MATHS

Distinction பெறுபேறடைய 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டுக்குளி. [6386]

---

## BECON
## கல்வி நிறுவனம்

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பொருளியல்
S. வரதராஜன்
B. A. (Hons)

### A/L - 94

பொருளியல் I
மீட்டல்

பொருளியல் II
பாடத்திட்டம்,
வரவு-செலவுத் திட்டம்

ஆரம்பம்:
1—8—1993
ஞாயிறு 11-00

### A/L - 95

உற்பத்தி-
இயல்தகவு வளையி

ஆரம்பம்:
1 - 8 - 1993
ஞாயிறு 1-00

(சி-5635)

---

## BECON
### கல்விநிறுவனம்

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

### A/L 94

(1 வருட வகுப்பு)
சனி, ஞாயிறு
வகுப்புகள்

பொருளியல் —
S. வரதராஜன்
11-00 — 12-00

அளவையியல் —
S.S. மனோகரன்
8-00 — 9-00

கணக்கியல் —
சௌந்தி
10-00 — 11-00

வர்த்தகம் —
பசில்
12-00 — 1-00

தமிழ் —
திருமதி மீரா
10-00 — 11-00

இந்து நாகரிகம் —
பாலா
7-00 — 8-00

புவியியல் —
ஜோசப்
9-00 — 10-00

கிறிஸ்தவம் —
நிரஞ்சன்
7-00 — 8-00

ஆரம்பம்:
01-08-93
ஞாயிறு

(இ-5623)

---

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 22 — 09 — 1934
உதிர்வு: 21 — 06 — 1993

அமரர்
### செல்லம்மா சண்முகம்

"தோன்றின் புகழொடு தோன்றுக என்னும் ஆற்றமெங் வாங்கிற் கமைந்த உதாரணம"

எமது இல்லத்தில் இன்று (31-07-93) சனிக்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

ச. குகநேசன் (ஆனந்தி)
(6613)

---

## நெஞ்சம் நெக்குருகும் 2ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் V. M. கணபதிப்பிள்ளை

(V. M. K. நகை மாளிகை உரிமையாளர், சாவகச்சேரி)

அன்னையின் மடியில்: 23 — 4 — 1913
ஆண்டவன் அடியில்: 31 — 7 — 1991

திதி: 7 — 8 — 1993

வானத்து முழுமதியாய்
வாசமலர் தானதுவாய்
தேனொத்த மொழிகொண்டு
தேசமெல்லாம் பேர்படைத்து
தானம் தவமெல்லாம்
தயவுடனே நனியாற்றிக்
கானம் பொழிந்துநின்ற
கண்ணியனே கலையழகே
வானத் திறைவனவன்
வண்மைமிகு திருவருளில்
மேனிலையாய் நீயமர
மேதினியில் வழுத்துகிறோம்,

— V. M. K. குடும்பத்தினர்.

(6384)

## ஒய்வூதியம்

(மானிப்பாய்)

மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான யூலை மாதத்திற்குரிய ஓய்வூதியப் பற்றுச்சீட்டுகளும் அந்தந்த வங்கிகளுக்கு யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவிலிருந்து நேற்று முன்தினம் 29ம் திகதி வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71-ரி)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

சீமெந்து ஆலை ஊழியரின் ஆனி மாதத்திற்குரிய சம்பளம் கொடுப்பனவுகள் யாழ். நாவலர் வீதியிலுள்ள தற்காலிக காரியாலயத்தில் வைத்து இன்று சனிக்கிழமையும் வழங்கப்பட்டு வருவதாக கூட்டுத்தாபன கணக்காளர் தெரிவித்துள்ளார். -கி

## இரு சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

கிளாலிச் சம்பவத்தில் கொல்லப்பட்டு யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலங்களில் நேற்று இரு சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

சி. மனோகரன் (40-வயது, ஆனைக்கோட்டை), ரி. ராகினி (18-வயது, ஏழாலை) ஆகியோரின் சடலங்களே அடையாளம் காணப்பட்டன. மேலும் இருவரது சடலங்கள் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (கி-சி)

**2ம் ஆண்டு**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாலையத் திறப்பு, உருவப் படங்களுக்கு மாலை அணிவித்தல், பெற்றோர் மலரிடுதல் போன்ற நிகழ்வுகள் விழாவில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகள் தொடர்பான எழுச்சி ஒருக்கூட்டம் நேற்று தென்மராட்சியின் பல பகுதிகளிலும் இடம்பெற்றன. (சி)

**பிரபாவை**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசிடம் முன்பு வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஆனால் இன்று இலங்கை அரசு தனது நாட்டின் முக்கிய பிரச்சினையாக இருந்துவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த வேளையில் திரு பிரபாகரனை எம்மிடம் ஒப்படைக்கும்படியான கோரிக்கையை இந்தியா வலியுறுத்த விரும்பவில்லை என்று அமைச்சர் சல்மான் குர்ஷித் நிருபர்களிடம் மேலும் தெரிவித்தார். (வி-சி

**மழைமாரி**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்த செ. செல்வரட்ணம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: தோட்டத்திற்கு நீர் இறைத்துக் கொண்டு நானும் மகனும் நின்றபோது இரு புக்காரா விமானங்கள் வட்டமிட்டன. இதனால் அச்சமடைந்த நாங்கள் நிலத்தில் வீழ்ந்து படுத்தோம். ஒரு கணத்தில் நாம் எழுந்துபார்த்தபொழுது குண்டுச் சிதறல்கள் எம்மைத்தாக்கின.

எமக்கு அருகில் 100 யார் தூரத்தில் குண்டுகள் விழுந்து வெடித்த இடத்தில் பெரிய புகைமண்டலம் எழுந்து வானை மறைத்தது என்றும் அவர்கூறினார். (கி-ரி)

**வடபகுதி**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இராணுவத்தினரால் கடுமையாக சோதனை செய்யப்பட்டு தீவிரமாக விசாரணை செய்யப்பட்டார்.

தீவிர சோதனையின்பின் இவரது பயணம் நிறுத்தப்பட்டு இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விளைஞனின் பெயர் விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ரி)

**செஞ்சிலுவை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்திடம் ஒப்படைத்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளிடம் புலிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வைத்து இராணுவத்தினரின் அஸ்தி அடங்கிய கலசத்தை ஒப்படைத்துள்ளதாக அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார். -வி-சி

**புலிகளிடம்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிடம் தஞ்சமடைந்தனர்

தஞ்சமடைந்த இவர்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தி காப்பாற்றி நன்றாக உபசரித்து முல்லைத்தீவில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைத்தனர்.

நந்தசிறி (24-வயது) நந்தசிறி தமயந்தி 20 வயது) பந்துசஹனி (18-வயது), ஆரெசேன விமலாவதி (23-வயது), சமன் (7 வயது), நந்தசிறி, தினேஷ்சிறி ஆகியோரே புலிகளிடம் தஞ்சமடைந்தனர்.

இவர்கள் முல்லை மாவட்டத் தளபதி பாண்டியன் அவர்களினால் சர்வதேச செஞ்சிலுவைப் பிரதிநிதியான எலிசபெத் செசய்மனிடம் ஒப்படைக்கப்பட்டனர். (கே-ரி)

**சுப்பசொனிக்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரும் காயமடைந்தார்.

நேற்று மாலை 5-20 மணியளவில் இரு புக்காரா விமானங்கள் சங்கானை பகுதியில் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டன.

இத்தாக்குதலில் செல்லையா செல்வரட்ணம் (64 வயது) இவர் விழிசிட்டி குரும்பசிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து சித்தன்கேணியில் வசித்து வருகிறார். இவரது மகன் செ. சிவகுமார் (25 வயது) ஆகியோர் காயமடைந்தனர்.

குண்டு வீச்சு விமானங்களின் இரைச்சலைத் தொடர்ந்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர். யாழ். குடா முழுவதும் நேற்றுமாலை நான்கு விமானங்களும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தின.

நேற்றுமாலை 4-50 மணியளவில் யாழ். குடாவின் வான்பரப்பில் ஊடுருவிய இரு சுப்பசொனிக் விமானங்கள் மூன்று தடவைகள் வட்டமிட்டன.

இதனையடுத்து வட்டு. பகுதியில் சுப்ப சொனிக் விமானம் ஒன்று ஒரே தடவையில் இரு குண்டுகளை வீசிய பின் பலாலிப் பக்கமாகச் சென்று அங்கிருந்து கொழும்பு சென்றன.

இதனையடுத்து இரு புக்காரா விமானங்கள் 5-20 மணியளவில் சங்கானைப் பகுதியைச் சுற்றி வட்டமிட்டபின் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்திவிட்டுப் பலாலி சென்று அங்கிருந்து கொழும்பு சென்றன. இவ்வேளை வலிகாமம் மேற்குப் பகுதிக்கு வந்த ஹெலிகொப்டர் அப்பகுதியை நோக்கிப் பல தடவைகள் வட்டமிட்டுச் சென்றது. (139-ரி-கி)

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பிற்கு

# பழி வாங்கும் நோக்குடன் படையினர் தாக்குதல்!

## 15 பொதுமக்கள் பலி

(யாழ்ப்பாணம்)

மணலாறு பிரதேசத்தில் மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதற்கு பழிவாங்கும் நோக்குடன் சிறிலங்கா படையினர் தமிழ் மக்கள்மீது தாக்குதல்களை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை வேரப்பாய், திருநெல்வேலிப் பகுதிகளில் சுப்பசொனிக் விமானங்கள் நடத்திய தாக்குதலில் இருவர்கள் உட்பட ஆறு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். கடந்த வியாழக்கிழமை கிளாலி நடுக்கடலில் எட்டுப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

நேற்று வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி சுப்பசொனிக், புக்காரா விமானங்கள் தாக்குதல்கள் நடத்தின.

கடந்த மூன்று நாட்களில் மட்டும் 15 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பழிவாங்கும் நோக்குடன் ஸ்ரீலங்கா படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி)

**ஐ.. ஸி ஆர்.ஸி.**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச செஞ்சிலுவைச்சங்க நடவடிக்கைகளை பெரும்பான்மையான பேச்சாளர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் இருக்கும் சிங்களப்பொலிசாரின் பெற்றோர்களையும் உறவினர்களையும் அழைத்துச் சென்ற செஞ்சிலுவைச்சங்கம் அவர்களைத் திருப்பி அழைத்து வராமல் இருப்பதே செஞ்சிலுவைச் சங்கத்தின் மீது இவர்கள் கோபத்திற்கு காரணமாக இருப்பதாக கூறப்படுகிறது. (ரி)

**கட்சி நீக்கத்தை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம் இருக்கவுள்ளார்.

எனது தந்தையான காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்காவினால் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரக் கட்சியிலிருந்து என்னை எனது தாயார் இடைநிறுத்திய செயலை எனது தந்தையிடம் முறையிடவே நானும் எனது ஆதரவாளர்களும் ஹொரகொல்லைத் தோட்டத்தில் நிறுவப்பட்டுள்ள எனது தந்தையின் சிலையின்கீழ் இன்று சத்தியாக்கிரகம் இருக்கப் போகின்றோம் என்று திரு. அநுரா பண்டாரநாயக்கா செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

மேற்படி சத்தியாக்கிரகத்தினால் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்களுக்கும் திரு அநுரா பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்படக்கூடும் என்ற அச்சத்தினால் அத்தனகல்லைத்தொகுதியில் பொலிசார் உஷார் படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி-ரி)

**கிளாலி**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தது.

கடற்படையினர் கிளாலி கடற்பரப்பில் பிரயாணிகள் படகுகள் மீது அடிக்கடி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் இதனால் பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சம்பவத்தில் கொலைப்பட்ட 9 பேரில் பலர் பேர் பெண்களாவர். 40க்கும் அதிகமானோருக்கு என்ன நடந்தது என்பதே தெரியவில்லை.

இதேவேளையில் யாழ் குடாவில் பொதுமக்கள் வாழும் பிரதேசங்களை நோக்கி ஸ்ரீலங்கா விமானப்படையினர் குண்டுத்தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இதில் குழந்தைகள் பெண்கள் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆஸ்பத்திரிக் கட்டிடம் ஒன்றும் இந்துக்கோயில் ஒன்றும் விமானக் குண்டுத்தாக்குதலினால் சேதமடைந்துள்ளதாக பி. பி. ஸி மேலும் தெரிவித்தது. (இ)

## இந்திய டிரக் உரிமையாளர்கள் இன்று முதல் வேலைநிறுத்தம்

(புதுடில்லி)

இந்தியாவில் வாகனங்கள் மீது அரசு விதித்த புதிய வரியை ஆட்சேபித்து இன்று முதல் 20 லட்சம் டிரக் வாகனங்களின் உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவுள்ளார்கள்.

மேற்படி வேலைநிறுத்தத்தினால் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களை சமாளிப்பதற்காக அரசு வாகனங்கள் தயாராக இருப்பதாகவும் இதேநேரம் அனைத்து மாநிலங்களிலும் பொலிசார் உசார் நிலையில் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## பிரதமர் கருத்து கணிப்பில் 'ராவ்' வெற்றி பெற்றார்

(புதுடில்லி)

இந்தியாவின் வருங்காலத்தில் பிரதமர் பதவிக்கு தகுதி வாய்ந்தவர் யார்? என்று நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் பெரும்பாலான மக்கள் பிரதமர் நரசிம்மராவையே ஆதரித்து வாக்களித்துள்ளார்கள்.

72 வயதான பிரதமர் நரசிம்மராவுக்கு நிகராக வேறு யாரும் கிடையாது என்று 60 வீத மக்களும், மகாராஷ்டிர முதல்வர் சரத்பவார், மனித வளத்துறை அமைச்சர் அருச்சுன் சிங் ஆகிய இருவரையும் தலா 20 வீத மக்களும் ஆதரித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பங்குத் தரகர் திரு. ஹர்ஷத் மேத்தாவிடமிருந்து பிரதமர் ராவ் லஞ்சம் வாங்கினார் என்ற குற்றச்சாட்டைத் தம்மால் நம்பமுடியவில்லை என்று பெரும்பாலான மக்கள் தெரிவித்துள்ளனர். (சி-வி)

## குழந்தைகள் பெற்றால் வேலைக்கு ஆபத்து

(புவனேஸ்வர்)

ஒரிஸ்ஸா மாநிலத்தில் 2 குழந்தைகட்கு மேல் பெற்றுள்ள அரச ஊழியர்களின் வேலை பறிபோகவுள்ளது.

இதற்கான சட்டம் மூலம் விரைவில் கொண்டுவரப் போவதாக முதலமைச்சர் பி. ஜே பட்நாயக் நேற்று புவனேஸ்வரில் கூறினார்.

இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுள்ளவர்கள் மாவட்ட பரிசத் தேர்தலில் பங்குகொள்ள முடியாதுள்ளதும் தற்போது அமுலில் உள்ளதுமான இச்சட்டத்தை அரச ஊழியர்களுக்கும் விஸ்தரிக்கப் போவதாக அவர் மேலும் சொன்னார். (கே.கி)

**கொழும்பு**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டதாகவும் ஏனையோர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி

நல்லூரில்

## தமிழீழ காவல்துறை 24 மணி நேர சேவை

(யாழ்ப்பாணம்)

கடந்த 24ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான நல்லூர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு பக்தர்களின் நன்மை கருதி தமிழீழ காவல்துறையினர் தமது பாதுகாப்புக் கடமைகளை 19ம் திகதியிலிருந்தே ஆரம்பித்துள்ளனர்.

உற்சவகால பாதுகாப்பை முன்னிட்டு கோவில் கிழக்குப் பக்கமாக பருத்தித்துறை வீதியில் தமது பணிமனை ஒன்றை அமைத்து 24 மணிநேரசேவையில் ஈடுபட்டுள்ளதாக உற்சவகால காவல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

கோவிலைச் சூழவுள்ள சகல வீதிகளிலும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு பக்தர்களின் பாதுகாப்பு ஒழுங்குகளை அடிக்கடி ஒலிபெருக்கிமூலம் தெளிவுபடுத்தி வருகிறார்கள். இவர்களுடன் இணைந்து செய். ஜோன் அம்புலன்ஸ், செஞ்சிலுவைச் சங்கம், சரணர், இந்து இளைஞர் பேரவை உறுப்பினர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். இவ்வுறுப்பினர்கள் ஒவ்வொரு தடைமுகாம்களிலும் நின்று சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் வியாபாரிகளின் நன்மைகருதி பி. ப. 1-00 மணி தொடக்கம் 2-00 மணி வரை பொருட்களை எடுத்துச் செல்ல வசதியாக வீதித்தடைகள் தளர்த்தப்பட்டுள்ளன. பக்தர்கள் தங்கள் தேவைகளை காவல்துறையினரிடம் தெரிவிக்கும்பட்சத்தில் அவைகளுக்கான உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் காவல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். இந்தச் சேவைகள் யாவும் எதிர்வரும் 19ம் திகதி வரை நடைபெறுமென தெரிவித்துள்ளார். -162-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post ffice, Sri Lanka under Licence Number B/10336/B